இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 19-10-2025

# ஆளுநர் ரவியின் இரண்டு சாதனைகள்!

கிண்டியில் உட்கார்ந்துகொண்டு ஆளுநர் ரவி இரண்டு சாதனைகளைச் செய்து வருகிறார். ஒன்று, தமிழ்நாட்டில் இனமான, தன்மான நெருப்பை அணையாமல் பார்த்துக் கொள்கிறார். இரண்டு, பா.ஜ.க. டெபாசிட் வாங்கும் ஒன்றிரண்டு தொகுதிகளிலும் டெபாசிட்டை காலி செய்து வருகிறார். அவர் ஆளுநராக வந்த பிறகு தமிழ்நாடு அடைந்த நன்மைகள் இவை.

ரவியை ஆளுநராக வைத்துக் கொண்டு, 'தி.மு.க.வுக்கு குடைச்சல் கொடுக்கிறோம்' என்று யாராவது நினைத்தால் அவர்கள் ஏமாந்து போவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, 'தி.மு.க.வுக்கு ரவி நன்மைதான் செய்து கொண்டிருக்கிறார்'. தி.மு.க.வுக்கான பரப்புரையை வேகப்படுத்தியதில் பெரும் பங்கு ரவிக்கே உண்டு.

அதனால்தான் அவரை தமிழ்நாட்டு ஆளுநர் பதவியில் இருந்து எடுத்துவிடாதீர்கள் என்று சொல்லிவருகிறோம். எடுத்தாலும், பா.ஜ.க. அலுவலகத்துக்குப் பக்கத்தில் அவரைக் குடியேற்றி வைத்துக் கொள்வதும் நல்ல நகர்வாக அமையும்.

விரக்தியின் விளிம்பில் துவண்டுகிடந்த சனாதனக் கும்பல் கையில் சிக்கியவர்தான் ஆர்.என்.ரவி. நாகாலாந்தில் இருந்து விரட்டப்பட்ட அவர், இங்கே வந்தபிறகாவது திருந்தி இருக்க வேண்டும். ஆனால் நாகாலாந்து மக்கள்மீதான கோபத்தை தமிழ்நாட்டு மக்கள்மீது காட்டினார். ஆளுநராக வந்தவர் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக இதுவரை ஏதாவது செய்திருக்கிறாரா என்றால் ஒன்றுமில்லை. 'தானும் படுக்க மாட்டேன், தள்ளியும் படுக்க மாட்டேன்' என்பதைப் போல வளர்ச்சிக்குத் துணை செய்யவில்லை. அரசு செய்ய நினைத்த வளர்ச்சித் திட்டங்களைச் செய்ய விடவும் இல்லை.

'ஆளுநருக்கு எந்த அதிகாரமும் கிடையாது' என்று பல முறை உச்சநீதிமன்றம் சொன்னபிறகும், அழிச்சாட்டியங்கள் செய்வதும், அட்டூழியங்களை நிகழ்த்துவதும் சகிக்க முடியாததாக இருக்கிறது.

**"சட்டமன்றத்தில் இருமுறை நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், குடியரசுத் தலைவருக்கு அதனை அனுப்பி வைத்தது சட்டவிரோதம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் கண்டிப்பாக ஒப்புதல் அளித்திருக்க வேண்டும் ஆளுநர் ஆர்.என் ரவியின் செயல்பாடு நேர்மையானதாக இல்லை. பொதுவான விதிப்படியும், மாநில அரசின் ஆலோசனையின் படியும் மட்டுமே ஆளுநர் செயல்பட முடியும்"** என்று தெளிவாக உச்சநீதிமன்றம் சொன்ன பிறகும் அதனை மதிக்காமல்செயல்படும்ரவியைஎன்னசெய்வது? உச்சநீதிமன்றத்தால் தான் அவரைக் கேள்வி கேட்க முடியும். உச்சநீதிமன்றம்தான் அவரை திருத்த வேண்டும்.

2022 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சித்த மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் மசோதா சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதில் பல்கலைக் கழக வேந்தராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருப்பார்கள். இதற்காக சென்னை மாதவரம் அருகே 20 ஏக்கர் நிலத்தையும் அரசு ஒதுக்கியது. இந்த மசோதா ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கு அவர் அனுமதி தரவில்லை. விளக்கம் கேட்கிறேன் என்ற பெயரால் குழப்பக் கேள்விகளைக் கேட்டார் ரவி. அதன்பிறகும் அனுமதி தரவில்லை. மசோதாவுக்கு ஒப்புதல் தராமல் திருப்பி அனுப்பினார்.

நேற்றைய தினம், சித்த மருத்துவப் பல்கலைக் கழக மசோதா மீண்டும் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அப்போது உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆளுநர் கேட்கும் கேள்விகளின் அபத்தங்களைப் பட்டியலிட்டுள்ளார்.

**"ஒரு சட்டமுன்வடிவு பேரவையில் விவாதிக்கப்படுகையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களுக்கு மட்டுமே அதில் திருத்தங்களை முன்மொழியவும், அதற்கான விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் திருத்தங்களைத் திரும்பப் பெறவும், இல்லையெனில், வாக்கெடுப்பைக் கோரவும் அதிகாரம் உள்ளது. இத்தகைய சட்டமுன்வடிவு பேரவையால் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு அதன்மீது கருத்துகளைத் தெரிவிக்கும் அதிகாரம் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள செய்தியில் இடம்பெற்றுள்ள கருத்துகளை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ள இயலாது. இதற்காக அவர் பயன்படுத்திய சொற்கள் இந்தப் பேரவையின் மாண்பை குறைக்கக்கூடிய கருத்து என்பதால், அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.**

**சட்டம் இயற்றுவது, இப்பேரவைக்கு மட்டுமே உள்ள அதிகாரம். ஆகவே, மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள அந்தக் கருத்துகள் அடங்கிய செய்தி அவைக் குறிப்பில் இடம் பெறுவதை மாநில சுயாட்சியில் நம்பிக்கை கொண்ட எந்த ஓர் உறுப்பினரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆளுநர் அவர்கள் அனுப்பியுள்ள செய்தியில் இருக்கக்கூடிய அவரின் கருத்துகள் மற்றும் பேரவையின் மாண்பைக் குறைக்கக்கூடிய அந்த வார்த்தை அடங்கிய பகுதிகளை இப்பேரவை நிராகரிக்கிறது"** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். இதனை தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தந்துள்ளது.

இதெல்லாம் ரவிக்கு உறைக்குமா எனத் தெரியவில்லை. 'ஆஹா எனக்கு எதிராகத் தீர்மானம் போடுகிறார்கள்' என்று தன்னை ஒருவேளை பெருமையாக நினைத்து மகிழ்ச்சியில்கூட அவர் திளைக்கலாம். தனிப்பட்ட ரவி நமக்கு முக்கியமல்ல. அரசியல் சட்டப் பதவியில் இருக்கும் அவர், இதற்குத் தலைகுனிய வேண்டும். ஆனால் அவர் அந்த ரகமாகத் தெரியவில்லை.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.10.2025) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன் சந்தித்து, மாநில அளவிலான சாதனை கணக்கெடுப்பு அறிக்கையினை (SLAS – 2025) (பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் மாவட்ட வாரியான மதிப்பாய்வுக் கூட்ட அறிக்கை) வழங்கினார். துணை முதலமைச்சரும் மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.10.2025) தலைமைச் செயலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, 2025–26 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பதிலுரை அளிப்பதற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.10.2025) தலைமைச் செயலகத்தில், பஞ்சாப் மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஹர்பஜன் சிங் மற்றும் பஞ்சாப் மாநில நீர்வளத்துறை அமைச்சர் பிரேந்தர் குமார் கோயல் ஆகியோர் சந்தித்து, பஞ்சாப் மாநில அரசின் சார்பில் ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தனர்.

### காஞ்சிபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில்

# கூட்டுறவு தயாரிப்புகளான காஞ்சி கேழ்வரகு மாவு - கோதுமை மாவு விற்பனை!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

*சென்னை, அக். 19-*

கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் நேற்று முன்தினம் (17.10.2025) தலைமைச் செயலகத்தில் காஞ்சிபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கூட்டுறவு தயாரிப்புகளான காஞ்சி கேழ்வரகு மாவு மற்றும் காஞ்சி கோதுமை மாவு ஆகியவற்றின் விற்பனையை BLINKIT விரைவு வணிக தளத்தில் தொடங்கி வைத்தார்கள்.



கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில், கூட்டுறவு நிறுவனங்களின் தயாரிப்புகள் விரைவு வணிகம் (Quick Commerce) வாயிலாக பொதுமக்களின் இல்லங்களுக்கே நேரடியாக விநியோகம் செய்யப்படும் என அறிவித்தார்கள்.

கூட்டுறவுப் பண்டக சாலைகள், பொதுமக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் நுகர்வுப் பொருட்கள் தரமானதாகவும், நியாயமான விலையிலும் விற்பனை செய்து வருகின்றது. இந்நுகர்வுப் பொருட்களை வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று விநியோகம் செய்யும் வகையில் விரைவு வணிக முறை செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்புக்கு ஏற்றவாறு முதற்கட்டமாக காஞ்சிபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கூட்டுறவு தயாரிப்புகளான காஞ்சி பாசுமதி அரிசி (1Kg), காஞ்சி கேழ்வரகு மாவு (500g), காஞ்சி நாட்டுச் சர்க்கரை (500g), காஞ்சி கோதுமை மாவு (500g), கம்பு மாவு (500g) மற்றும் கடலை மாவு (250g) ஆகியவை விரைவு வணிக தளங்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் (17.10.2025) முதற்கட்டமாக காஞ்சிபுரம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கூட்டுறவு தயாரிப்புகளான காஞ்சி கேழ்வரகு மாவு மற்றும் காஞ்சி கோதுமை மாவு ஆகியவற்றின் விற்பனையை Blinkit விரைவு வணிக தளத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்கள்.

இச்சேவையினை பெற பொதுமக்கள் தங்களது கைப்பேசியில் Blinkit என்ற விரைவு வணிக மொபைல் செயலியை பதிவிறக்கம் செய்து, அதன்மூலம் கூட்டுறவுப் பொருட்களை ஆர்டர் செய்துகொள்ள வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுப் பொருட்களை ஆர்டர் செய்ய Blinkit விரைவு வணிக தளத்தில் search-ல் கூட்டுறவுப் பொருட்களை உள்ளீடு செய்து ஆர்டர் செய்து கொள்ளலாம். உதாரணமாக "Kanche Ragi flour" என உள்ளீடு செய்து காஞ்சி கேழ்வரகு மாவினை ஆர்டர் செய்து கொள்ளலாம். மேலும், அடுத்தடுத்து பிற கூட்டுறவுப் பொருட்களும் விரைவு வணிக தளத்தில் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, சென்னையில் வசிக்கும் பொதுமக்கள் மேற்காண்ட கூட்டுறவுத் தயாரிப்புகளை குறைந்த விலையில், தரமானதாக Blinkit விரைவு வணிக தளத்தில் தங்கள் இல்லங்களுக்கே ஆர்டர் செய்து, வாங்கி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை அரசு முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். க. நந்தகுமார் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) சா.ப.அம்ரித், இணைப் பதிவாளர் சிவக்குமார் உட்பட கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அல்லவை தள்ளுவோம்; நல்லவை கொள்ளுவோம்!

## (கவியரசு கண்ணதாசன் நினைவுநாள்)



வானம் அழுவது
மழையெனும் போது
வையம் அழுவது
பனியெனும் போது
கானம் அழுவது
கலையெனும் போது
கவிஞன் அழுவது
கவிதையாகாதோ?

ஆகும்;
ஆனதே!

உன் கண்ணீரெல்லாம்
தத்துவமானது
புன்னகை எல்லாம்
காதலானது

இன்பத்தின் கொடுமுடியிலும்
துன்பத்தின் பள்ளத்தாக்கிலும்
வாழ்ந்து கழிந்த உன்வாழ்வு
சிந்தையில் அறைந்தொரு
சேதி சொல்கிறது

உன்மீது சொன்ன பழிகளோ
பிறர்மீது நீசொன்ன வசைகளோ
சமூகத்தின் ஞாபகத் தடத்தில்
இப்போது இல்லை

இலக்கியம் மட்டுமே
ஏட்டில் இருக்கிறது

பாடல் மட்டுமே
காற்றில் இருக்கிறது

தாக்குதல் நிலைக்காது
ஆக்குதல் நிலைக்கிறது

இதைத்தான் உன்வாழ்வு
காதுகளில் ஓதுகிறது கவியரசே!

அல்லவை தள்ளுவோம்;
நல்லவை கொள்ளுவோம்

புகழ் வணக்கம்.



கவிப்பேரரசு
**வைரமுத்து**